**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**OS.No. 95/2014**
**நாள்.14.10.2025**
**வா.சா.1- சின்னத்தம்பி**
**த/பெ - சங்கர்**

**2,3,5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எனது தாயார் வெள்ளையம்மாள். அவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். வா.சா.1ன் நிரூபண வாக்குமூலத்தில் தனக்காகவும், மற்ற வாதிகளுக்காகவும் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்வதாக கூறியுள்ளார் என்றால் சரிதான்

2. அதேபோல் நானும் எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் எனக்காகவும், மற்ற வாதிகளுக்காகவும் தாக்கல் செய்வதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3. சர்வே எண்.1539/3ல் உள்ள மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 13 1/2 ஏக்கர்.

4. தாவா 1லக்க சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியும், சுண்டமலைக்கு கீழும், பாரஸ்ட்ரோட்டிற்கு மேலும், தொத்தன்அம்பலம் நிலத்திற்கு மேற்கும், வீரமலை ஆறுமுகம் நிலத்திற்கு கிழக்கும் ஆகும்.

5. மேற்படி நான்குமாலுக்கு கட்டுப்பட்டது தான் சர்வே எண்.1539/3ல் உள்ள 13 1/2 ஏக்கர் என்றால் சரிதான்.

6. சர்வே எண்.1535/C ல் மொத்தம் எவ்வளவு ஏக்கர் என்றால் 4 1/2 ஏக்கர் ஆகும்.

7. சர்வே எண்.1535/C ன் நான்குமால் தெரியுமா என்றால் தெரியும், சுண்டமலைக்கு கீழும், பாரஸ்ட்ரோட்டிற்கு மேலும், தொத்தன்அம்பலம் நிலத்திற்கு மேற்கும், வீரமலை ஆறுமுகம் நிலத்திற்கு கிழக்கும் ஆகும்.

8. மேற்படி கூறப்பட்ட நான்குமாலுக்கு விரோதமாக தாவா சொத்துவிவரத்தில் நான்குமால் கூறப்பட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல.

9. சர்வே எண்.1535/C ல் 9 ஏக்கர் 30 செண்டில் கீழ்புறம் பாரஸ்ட்ரோட்டிற்கு வடக்கும், வெள்ளையன் அம்பலம் பூமிக்கு மேற்கும், சர்வே எண்.1532 க்கு சர்க்கார் தரிசுக்கு தெற்கும், எங்கள் கைவசமுள்ள பூமிக்கு கிழக்கும் உள்ள விஸ்தீரணம் 3 ஏக்கர் என்றால் சரிதான். அதில் 2 புளியமரங்கள் உள்ளன என்றால் சரிதான்.

10. சர்வே எண்.1539 ல் 4 ஏக்கர் 18 செண்டில் கீழ்புறத்தில் எங்கள் பூமிக்கு தெற்கு, கிழக்கு, வடக்கு மற்றும் கோட்டைகட்டி அம்பலம் நிலத்திற்கு மேற்கு இதற்குள் செண்ட் 50 உள்ளது என்றால் சரிதான்.

11. மேற்படி சொத்துகளை எனது பாட்டி பாப்பம்மாள், எனது தகப்பனார் சங்கர், மைனராக இருந்த கன்னியம்மாள் மற்றம் தனலட்சுமி ஆகியோருக்கு பாப்பம்மாள் கார்டியனாக இருந்து 1ம் பிரதிவாதியின் மனைவி தெய்வானையம்மாள் பெயரில் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் இருக்கலாம்.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**